சார்பு நீதிமன்றம் மதுராந்தகம்

HMOP No.36/2023

2025ம் ஆண்டு மார்ச் மாதம் 12ம் நாள் PW2 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு 44வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.தி.கணேஷ், பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர். திருமதி. பாக்கியலட்சுமி<br>க /பெ. கோவந்தராஜ் | நாள் 12.03.2025 |
| வயது. 62 | தொழில் |
| கிராமம். சோத்துப்பாக்கம் | வட்டம். |

<u>மனுதாரர் சா.2 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு மனுதாரர் தரப்பில் முதல் நிலை விசாரணை செய்யப்படுகிறார்</u>

1. நான் மனுதாரரின் தாயார் மற்றும் மனுதாரர் தரப்பு சாட்சி. நான் எனது முதன்மை விசாரணை வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் நான் சொல்லிதான் எழுதப்பட்டது. அதில் உள்ள கையொப்பங்கள் என்னுடையதுதான்.

<u>எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

2. மனுதாரர் என்னுடைய தத்து மகன் என்று சொன்னால் சரிதான். எனக்கு குழந்தை இல்லாததால் எனது அண்ணன் மகனை தத்து எடுத்துக் கொண்டேன். திருமணத்திற்கு பிறகு இருவரும் எங்கள் வீட்டில்தான் குடியிருந்தார்கள். அதன் பிறகு மனுதாரர் சென்னையில் பணி புரிந்ததால் இருவரும் அங்கு சென்றுவிட்டார்கள். திருமணத்திற்கு என் அண்ணன் மற்றும் அண்ணி வந்திருந்தனர். திருமணத்திற்கு முன்பு எதிர்மனுதாரர் குடும்பத்தினரிடம் மனுதாரர் என் தத்து மகன் என்பதை தெரிவித்துள்ளேன். சென்னை அனகாபுத்தூரில் குடியிருந்தார்கள். முகவரி தெரியாது. அது வாடகை வீடு என்றால் சரிதான்.

அனகாபுத்தூரில் வாடகை வீடு பார்த்து குடிபெயர்ந்து அனைத்தும் மனுதாரர்தான். எனக்கு அதுபற்றி நேரடியாகத் தெரியாது. நான் 1 அல்லது 2 மாதத்திற்கு ஒருமுறை அனகாபுத்தூர் சென்று இருவரையும் பார்த்து வருவேன்.

3. எதிர்மனுதாரர் 25 சவரன் தங்க நகைகள் அவர் வசம் உள்ளதாக எவ்வாறு கூறுகிறேன் என்றால் எதிர்மனுதாரர் எடுத்துச் சென்றுவிட்டதாக மனுதாரர் என்னிடம் கூறினார். மனுதாரருக்கு மது அருந்தும் பழக்கம் மற்றும் புகை பிடிக்கும் பழக்கம் உள்ளது என்றால் இல்லை. மனுதாரருக்கு அனைத்து தவறான பழக்கமும் உள்ளது என்றால் இல்லை. அந்த தவறான பழக்கத்தை மறைத்து எதிர்மனுதாரர் வீட்டில் பேசி நான் திருமணம் செய்து வைத்தேன் என்றால் இல்லை. திருமணத்திற்கு நான்தான் பேசி முடித்தேன். அனகாபுத்தூருக்கு நாங்கள் அடிக்கடி சென்று வருவோம். எதிர்மனுதாரர், மனுதாரர் இரண்டு வருடங்கள்தான் வாழ்ந்தார். அந்த காலக்கட்டத்தில் 10 நாட்களுக்குள் இருவருக்கும் பிரச்சனை ஏற்பட்டது. இருவரும் இரண்டரை வருட காலங்கள் சேர்ந்து வாழ்ந்தார்கள் என்றால் இல்லை.

4. காவல் நிலையத்தில் நானும், மனுதாரரின் பெற்றோரும் சென்று புகார் அளித்தோம். எந்த தேதியில் புகார் அளித்தோம் என்றால் மே மாதம் 18ம் தேதி புகார் அளித்தோம். அதற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளோம். அவ்வாறு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அந்த புகாரின் மீது விசாரணை செய்ததில் எதிர்மனுதாரர் மனுதாரருடன் வாழ விருப்பம் இல்லை என்று கூறிவிட்டார். மனுதாரர் மது மற்றும் புகைப்பழக்கத்தால் அடிமைப்படுத்தப்பட்டுள்ளார் என்றாலும், அதனால்தான் எதிர்மனுதாரர் வாழ விருப்பம் இல்லை என்று கூறியுள்ளார் என்றாலும் சரியல்ல. மனுதாரர் உண்மை விவரங்களை மறைத்து எதிர்மனுதாரருக்கு தெரியாமல் 18.2.2023 தேதியில் புகார் அளித்து ம.த.சா.ஆ.4 பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. தற்பொழுது எதிர்மனுதாரர், மனுதாரருடன் சேர்ந்து வாழ தயாராக உள்ளார் என்றால் எதிர்மனுதாரர் மன உளைச்சல் ஏற்படுத்தியதால்

மனுதாரர் தயாராக இல்லை. எதிர்மனுதாரர் கொடுத்த வரதட்சணை பத்தவில்லை என்றும், நான்கு சக்கர கார் வாங்கித் தர கேட்டோம் என்றாலும், அதனால்தான் மனுதாரர், எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ முன்வரவில்லை என்றால் சரியல்ல. அனகாபுத்தூரில் வாடகை வீட்டை எதிர்மனுதாரரின் பெற்றோர் தான் ஏற்பாடு செய்தார்கள் என்றால் சரியல்ல. அதனால்தான் மனுதாரரின் முகவரி தெரியவில்லை என்று கூறுகிறேன் எனற்ால் சரியல்ல. மனுதாரர் வசதியான இடத்தில் திருமணம் செய்ய இருப்பதால் பொய்யான இம்மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் கூறியுள்ள அனைத்து சங்கதிகளும் பொய்யானவை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை